**தலைப்பு 20 - தேர்தல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 20-தேர்தல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்க கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 20 ஆந் திகதி தேர்தல்கள் திணைக்களத்தின் தேர்தல்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

---

தேர்தல்கள் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 5,966.40 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 5,848.91 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலிருந்து ரூபா 117.49 மில்லியன் அல்லது 1.97 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 5,913.43 | 5,802.76 | 110.67 | 1.87 |
| மூலதனம் | 52.97 | 46.15 | 6.82 | 12.87 |
| **மொத்தம்** | **5,966.40** | **5,848.91** | **117.49** | **1.97** |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

தேர்தல்கள் திணைக்களத்திற்குரிய 02001 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 27.75 | 14.65 | 16.00 | 17.34 | 80.00 | 56.65 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

தேர்தல்கள் திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0121/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 30.96 மில்லியன் ஆகும்.

## 2.4 பொதுவைப்புக் கணக்குகள்

தேர்தல்கள் திணைக்களத்தின் கீழான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 04 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5.62 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0066/000 | 0.38 |
| 6000/0000/00/0002/0086/000 | 0.10 |
| 6000/0000/00/0016/0038/000 | 5.02 |
| 6000/0000/00/0018/0048/000 | 0.12 |
| **மொத்தம்** | **5.62** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

தேர்தல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன், ஒரு பதிவேடு தொலைந்து போயிருந்தமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தலைமை அலுவலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கிடைக்கப்பெறுகின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் போன்றவற்றை பதிவு செய்யும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | தொலைந்து போயிருந்தது. |

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

02001 விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,146,584 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 05 மாதங்கள் முதல் 15 வருடங்கள் வரையான கால வீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையை கைவிட்டுச்சென்ற இரு உத்தியோகத்தர்களின் ரூபா 242,131 கூட்டுத்தொகையான கடன் மீதி 15 வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

ரூபா 11,499,999 கிரயமான 02 மோட்டார் வாகனங்கள் ஒரு வருட காலமாக விளைவற்று காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமாக இருந்த 03 மோட்டார் வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமல் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| அரசியலமைப்புச் சட்டத்தின் 104 (உ) உறுப்புரை | - | தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அரசியலமைப்புச் சட்ட சபையின் அங்கீகாரத்தின் கீழ் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட வேண்டுமெனினும், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 237 (ஆ) | 1,291,873 | SQL Server 2014 வகையான 03 மென் பொருட்களை திணைக்களத்திற்கு வழங்குவதற்கு முன்னர் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 1647 (ஆ) | - | தேர்தல்கள் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பில் முழுமையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற தன்மை உடையனவாக காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் நடைமுறைகளிலிருந்து விலகுதல்**

SQL Server 2014 வகையான 03 மென் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,291,873 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டலுக்கமைய விலைக்கேள்வியினை திறக்கும் குழுவின் முன்னால் பெறப்பட்ட விலைக்கேள்விகள் திறக்கப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.3 ஆம் வழிகாட்டலுக்கமைய அளவுக்குறிப்பீடுகளுக்கமைய பொருட்கள் பெறப்பட்டதாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தரெருவரின் சான்றுறுதிப்படுத்தல் இன்றி பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) தேர்தல்கள் திணைக்களத்தின் 60 வருடப் பூர்த்தியினை கொண்டாடுதல்**

தேர்தல்கள் திணைக்களத்தின் 60 ஆவது வருடப் பூர்த்தியினை கொண்டாடுதல் மற்றும் தெற்காசிய நாடுகளிகளின் தேர்தல்கள் அதிகாரிகளின் மாநாட்டின் 6 ஆவது அமர்விற்காக ரூபா 10,933,624 தொகையான செலவினம் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தேர்தல்களை நடாத்துதல் மற்றும் வாக்காளர்களை பதிவு செய்தல் செலவின விடயத்தின் கீழ் அந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.6 நட்டங்களும் இழப்புக்களும்

மீளாய்வாண்டில் இரண்டு வாகன விபத்துக்கள் தொடர்பாக ரூபா 148,229 கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) 2015 ஆம் அண்டில் ஜீப் வண்டியொன்றின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 128,444 செலவிடப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) தேர்தல்கள் திணைக்களத்தில் பயன்படுத்தப்படும் அச்சீட்டு இயந்திரத்திற்கு தேவையான டோனர் தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தாது கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தமையால் ரூபா 7,471,297 பெறமதியான 571 டோனர்கள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன. 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களில் வாக்கெடுப்புகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் அந்த டோனர் இருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், எதிர்பாராத மற்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறி இடம்பெற்றிருந்த சில விடயங்களினால் அந்த காலப்பகுதியில் தேர்தலை நடாத்த முடியாமல் போனமையால் அந்த டோனர் இருப்பானது எஞ்சியிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

வாகனப் பாவனைக்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்கு தேர்தல்கள் இடம்பெறும் காலப்பகுதியில் குழாம் பிரயாண வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வசதிகள் தேர்தல்கள் இடம்பெறாத சாதரண கடமைகளில் ஈடுபடும் காலப்பகுதியிலும் நடைமுறையில் இருந்தது.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 41 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 22 | 06 | 16 |
| (iii) | இரண்டாம் நிலை | 475 | 374 | 101 |
| (iv) | ஆரம்ப நிலை | 225 | 201 | 24 |
| | **மொத்தம்** | **776** | **622** | **154** |